45

மறதி எதனால்?

ஆமாம், சில விஷயங்களை நான் மறந்து விடுகிறேன்.

'நடேசனைக் கண்டால் நான் ரொம்ப விசாரித்தேன் என்று சொல்லுங்கள். அவர் ஏன் கலியாணத்தன்று தாம்பூலத்திற்கு வரவில்லை? மிகவும் மனஸ்தாபப்பட்டேன் என்று சொல்லுகிறீர்களா?'

சதாசிவம் என்னை பீச்சில் கண்டவுடன் என்னுடன் ஏதாவது பேசியாக வேண்டும் என்று இவ்வாறு எனக்கொரு வேலை கொடுக்கிறது போலப் பேசுகிறார். நான் ஆகட்டும் என்று ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் நடேசனைக் காணும் பொழுது கேட்பதில்லை. மறந்து விடுகிறேன். சதாசிவமே நடேசனைக் காண்கிறார். அவர்கள் ஏதாவது பேச வேண்டுமே!

'நேற்று கோபாலனைக் கண்டேன். உங்களிடம் ஒரு புகாரைச் சொல்லச் சொன்னேனே, சொன்னாரா?' என்கிறார்.

'இல்லையே, என்ன அது?' என்று நடேசன் தூக்கிவாரிப்போட்டது போலக் கேட்கிறான்.

'ஒன்றுமில்லை, நீங்கள் ஏன்...' என்று கலியாணத் தாம்பூலத்தைப் பற்றிக் கேட்கிறார்.

அதற்குப் பதில், நடேசன் ஏதாவதொரு நிஜத்தையோ பொய்யையோ சாக்காகச் சொல்லுகிறான்.

சதாசிவம் என்னை மறுநாள் பீச்சில் காணுகிறார்.

'நீங்கள் நடேசனிடம் சொல்லவில்லையோ? நான் கண்டேன்'.

'ஓ, மறந்து விட்டேன். அவனைக்கூட கண்டேன். ஞாபகமில்லை. உங்களைப் பார்த்த பிறகுகூட எனக்கு ஞாபகம் வரவில்லை. நீங்கள் கேட்ட பிறகுதான் நினைவு வருகிறது. மன்னிக்க வேண்டும். ஞாபகம் மறதி எனக்கு ஜாஸ்திதான்' என்று அவரிடம் சொல்லிவிடுகிறேன்.

என்மனைவி 'சாய்ந்திரம் வருகிற பொழுது நிட்டிங் ஊசியும் நூலும் வாங்கிக்கொண்டு வாங்கோ மறக்காமெ' என்கிறாள்; நான் அவசர

பாரததேவி, 13.08.1939

அவசரமாக ஆபீஸிற்குக் கிளம்பும்பொழுது.

'ஆகட்டும்!' என்று சொல்லுகிறேன்.

சாயந்திரம் திரும்பும் பொழுது பேப்பரும் எழுதும் காகிதமும் வாங்கிக்கொண்டு வீட்டிற்குப் போகிறேன். மை போட ஒரு இங்க் பில்லரும்கூட.

'ஊசி?' என்று கேட்கிறாள் மனைவி.

'அடாடா! ஞாபகம் இல்லை!' என்கிறேன்.

'இதெல்லாம் வாங்கிக் கொண்டுவர நினைவிலிருக்கிறது. பர்ஸில் காசு குறைந்தால் எங்கே என்று கேட்கத் தெரிகிறது. அதற்கெல்லாம் ஞாபகமறதியே கிடையாது–' என்று அவள் அடுக்க ஆரம்பிக்கும் போது எனக்குக் கோபம் வருகிறது.

'நான் உன்னிடம் பொய்யா சொல்லுகிறேன்?' என்று சீறுகிறேன்.

'நான் சொல்லுகிறதை காது கொடுத்துக் கேட்டா ஏன் ஞாபகம் இருக்காது? நான் சொல்லுவது ஒன்றுமே லட்சியம் இல்லை. நானும் இப்படி' என்று என் மனைவி தன் பல்லவியை ஆரம்பிக்கிறாள்.

ஆனால் என் வாய் அடைப்பட்டுப் போகிறது. அவள் சொன்னதில் உண்மை இருக்கிறது. என் ஞாபக மறதியின் காரணத்தை அவள் சொல்லிவிட்டாள்.

ஞாபகத்தில் இருக்க வேண்டுமென்றால் ஒன்றைச் சரியாக மனதில் பதித்துக் கொண்டால் தானே இருக்கம்? இயற்கையாகவே (பழக்கத்தால் என்று சிலர் சொல்லக்கூடும்) எனக்குச் சிலவற்றில் சிரத்தை கிடையாது. அவற்றை நான் மனதில் வாங்கிக் கொள்வதில்லை. வேண்டுமென்று அல்ல. அவை மனதில் பதிவதில்லை. என் மனதிற்கு 'அவை தேவை யில்லை' என்று அந்தந்த நிமிஷம் தோன்றுகிறது போலிருக்கிறது.

நண்பர் சதாசிவம் என்னைக் கண்டதற்காக எதாவது பேச வேண்டுமே என்பதற்கு நடேசனை ஏதோ கேட்கும்படி சொன்னார். 'நடேசனைக் கண்டால்' என்று சொல்லியதாலேயே அவர் அதை வெறும் பேச்சாகத் தான் பேசினார் என்று எனக்குத் தோன்றியிருக்க வேண்டும். ஆகையால் தான் அது என் மனதில் தங்கவில்லை.

ஆனால் மனைவி சொன்னது வெறும் பேச்சல்ல கட்டளை. அதை நிறைவேற்றுவதைப் பொறுத்திருந்தது எங்கள் இருவரிடையே இருக்கும் நல்லெண்ணம். அப்படியிருந்தும் அதை ஏன் நான் மறந்தேன்? அதில் ஏன் எனக்கு ஞாபகமறதி?

அது அவ்வளவு பெரிய விஷயம் என்று நான் அந்த நிமிஷம் எண்ணவில்லை. அதுதான் காரணமாயிருக்க வேண்டும் எனவே அதை என் மனது வாங்கிக் கொள்ளவில்லை. என் மனைவிக்கு அது பெரிய விஷயமாக இருக்கலாம். ஆனால் என்ன செய்வது?

எதை நான் சின்ன விஷயம் என்று கருதினேனோ அதை வைத்துக் கொண்டுதான் என் மனைவி என் அன்பைப் பரீக்ஷை செய்கிறாள்.

'இதிலேயே இவ்வளவு கவனம்?-' என்று ஆரம்பிக்கிறாள்.

'இதில்தான் கவனம் இல்லை, உன் சம்பந்தமான முக்கிய விஷயங்களில் நான் என்றாவது கவனமில்லாமல் இருந்திருக்கிறேனா?' என்று நான் பழைய சம்பவங்களிலிருந்து ஆதாரங்கள் எடுத்துக் காட்டினால் கூட அவள் கேட்பதில்லை.

'அதெல்லாம் என்ன பிரயோஜனம்? அதெல்லாம் பிரமாதம் இல்லை. அதையெல்லாம் எல்லோரும் தான் செய்வார்கள். நீங்கள் என்ன விபரீதமாகச் செய்து விட்டீர்கள். இந்தச் சின்ன விஷயமாகத்தான் எனக்குப் பரீக்ஷை. இதில்-'

'ஒரு தடவை பிசகு செய்தால்-'

'ஒரு தடவையா, நேற்று பூ வாங்கிக்கொண்டு வரச் சொன்னேனே கடைத் தெருவிற்குப் போகும் போது? வாங்கிக்கொண்டு வந்தீர்களோ? முந்தா நாள்-'

'இதெல்லாம் என்ன பெரிய விஷயங்கள்?'

'எதுதான் பெரிய விஷயம்? ஒன்றுமே இல்லை. சாப்பிடுவதும் தூங்குவதும் தானா பெரிய விஷயங்கள்?' என்று என் மனைவி தாக்க ஆரம்பித்தாள்.

'இல்லையே, அவை பெரியவை என்று நான் எப்பொழுது சொன்னேன்?'

'உங்கள் யோசனைகளும் எழுத்துக்களும்தான் பெரியவையோ பின்?'

'எனக்குப் பெரியவையாக இருப்பவை எனக்குப் பெரியவை தான்?'

'பாக்கியெல்லாம்?'

'அதைக் கேட்பானேன்?'

●